புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள் 23

நவம்பர் 2025

# கனிந்த பழத்திற்கான அடையாளங்கள்

முதிர்ச்சியடைந்துள்ள குணலட்சணத்தினை தனித்துவமாகக் காட்டும் அடையாளங்கள் என்னென்ன?

**"அழகு"** என்பது, கனிந்த பழத்திற்குரிய முதல் அடையாளமாகும். கனிந்த பழமானது, அதற்கேயுரிய அழகினைப் பெற்றிருக்கும். பழமானது கனியக்கனிய, சூரியன் அதற்கு அழகிய வண்ணங்களை அளித்து, அதன் நிறங்களை ஆழமாக்குகின்றது; இதனால் பழத்தின் அழகு, பூவின் அழகிற்குச் சமமாகின்றது; மேலும் சில அம்சங்களில் பூவைவிட மிஞ்சியும் காணப்படுகின்றது. கனிந்த/முதிர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவனிடத்தில் பரிசுத்தமாகுதலின் அழகினைக் காணலாம்; இதை தேவனுடைய வார்த்தைகள் "பரிசுத்த அலங்காரம்" என்று குறிப்பிடுகின்றது.

**"மென்மை"** என்பது, கனிந்த பழத்திற்குரிய மற்றுமொரு அடையாளமாகும். பிஞ்சு பச்சை காயானது, கடினமாகவும், கல் போன்றும் காணப்படும். முதிர்ந்த கிறிஸ்தவன் மென்மையான ஆவியினை உடையவனாக அறியப்பட்டிருப்பான்.

**"தித்திப்பு"** என்பது, கனிந்த பழத்திற்குரிய மற்றுமொரு அடையாளமாகும். கனிந்திராத பழம் புளிப்பு சுவை உடையதாகக் காணப்படும். ஆவியின் கனிகள் வளரும்போது, நாம் அனுதாபத்திலும், அன்பிலும்கூட நிச்சயமாக வளருவோம்; மேலும் நமது ஆவிக்குரிய கனிகள் கனியும்போது, நம்முடைய சக கிறிஸ்தவர்களிடம் நாம் அதிக இனிமையுடன் பழகுகின்றவர்களாக இருப்போம். கசப்பான ஆவியை உடைய கிறிஸ்தவர்கள் அநேக காரியங்களைப் பற்றிய அறிவை உடையவர்களாக ஒருவேளை காணப்படலாம் . . . இவர்கள் கண்டனம் செய்வதில் விரைவானவர்கள் என்பதால், தீர்ப்பு வழங்குவதிலும் மிகவும் கூர்மையாக ஒருவேளை இருக்கலாம் . . . ஆனாலும் இவர்கள் இருதயத்தில் இன்னும் முதிர்ச்சியடையாதவர்களே ஆவார்கள்.

**"தளர்வான பிடி"** என்பது, கனிந்த பழத்திற்குரிய மிகவும் தெளிவான மற்றுமொரு அடையாளமாகும். கனிந்த பழமானது தண்டிலிருந்து எளிதாகப் பிரிக்கப்படலாம். இது (முதிர்ந்த கிறிஸ்தவன் கொண்டிருக்கும்) உலகத்தின் மீதான தளர்வான பற்றுதலை/பிடிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

- Bible Student's Library